பெருநகர சென்னை மாநகராட்சி, சுகாதாரத் துறை சார்பில் கோடம்பாக்கம் மண்டலம், கோயம்பேடு புறநகர் பேருந்து நிலைய வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள டெங்கு கொசு ஒழிப்பு விழிப்புணர்வு குறித்த மாதிரி குடியிருப்பை, அரசு கூடுதல் செயலாளர் அதுல்யா மிஸ்ரா நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். உடன் துணை ஆணையாளர் மதுசூதன் ரெட்டி, மத்திய வட்டார துணை ஆணையாளர் சுபோத்குமார், மண்டல அலுவலர் எஸ். நடராஜன் மற்றும் மாநகராட்சி அலுவலர்கள் உள்ளனர்.

பெருநகர சென்னை மாநகராட்சி, அண்ணாநகர் மண்டலம் வார்டு 108 சூளைமேடு கலைமகள் தெருவில் உள்ள அடுக்குமாடி குடியிருப்பில் வாளியில் தேங்கியுள்ள நீரில் டெங்கு கொசுவை உற்பத்தி செய்யும் புழுக்கள் உள்ளதா என மருத்துவ வாரிய தேர்வாணையத் தலைவர் வி.ராஜாராமன் பார்வையிட்டு ஆய்வு செய்தார். உடன் மண்டல அலுவலர் எம்.பரந்தாமன், மற்றும் மாநகராட்சி அலுவலர்கள் உள்ளனர்.

சென்னையில் 83 ஆயிரம் இடங்களில் டெங்கு கொசு ஒழிப்பு ஆய்வு

தேங்காய் சிரட்டை, பாட்டில், டயர் என 8 டன் தேவையற்ற பொருட்கள் அப்புறப்படுத்தப்பட்டது

சென்னை, அக். 23–

வடகிழக்கு பருவமழையையொட்டி சென்னையில் 83 ஆயிரத்து 808 இடங்களில் டெங்கு கொசு ஒழிப்பு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

தேங்காய் சிரட்டைகள், பாட்டில்கள், டயர்கள் என சுமார் 8 டன் தேவையற்ற பொருட்கள் அப்புறப்படுத்தப்பட்டன.

பருவமழை காலம் தொடங்க உள்ள நிலையில் பெருநகர சென்னை மாநகராட்சி பொதுசுகாதாரத்துறை சார்பில் டெங்கு கொசு ஒழிப்பு மற்றும் நோய்த்தடுப்பு நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளன.

சென்னை மாநகராட்சியில் வடகிழக்கு பருவமழை துவங்க உள்ள நிலையில் பொதுமக்களுக்கு சளி, இருமல் மற்றும் காய்ச்சல் போன்ற நோய்கள் வர வாய்ப்புள்ளது. சென்னை மாநகராட்சியில் 1 முதல் 15 மண்டலங்களுக்கும் கண்காணிப்பு அலுவலர்களாக நியமிக்கப்பட்டுள்ள இந்திய ஆட்சிப்பணி நிலையில் உள்ள 15 கண்காணிப்பு அலுவலர்கள் வெள்ள தடுப்பு நடவடிக்கைகள், சுகாதார பணிகள் மற்றும் டெங்கு கொசு ஒழிப்பு விழிப்புணர்வு பணிகளை போர்க்கால அடிப்படையில் மேற்கொண்டுள்ளார்கள்.

அதனைத் தொடர்ந்து சென்னை மாநகராட்சியிலுள்ள 15 மண்டலங்களிலும் கண்காணிப்பு அலுவலர்கள் தலைமையில் மண்டல அலுவலர்கள், கூடுதல் மாநகர நல அலுவலர், மண்டல நல அலுவலர்கள், சுகாதார ஆய்வாளர்கள், இளநிலை பூச்சியியலாளர்கள், மலேரியா தொழிலாளர்கள் கொண்டு ஆய்வு மற்றும் நோய்த்தடுப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

8 லட்சம் தேவையற்ற பொருள் அகற்றும்

21–ந் தேதி அன்று கண்காணிப்பு அலுவலர்கள் தலைமையில் சென்னை மாநகராட்சி 15 மண்டலங்களிலும் உள்ள வீடுகள், தங்கும் விடுதிகள், வணிக வளாகங்கள், பள்ளிகள், கல்லூரிகள், தொழிற்சாலைகள், மருத்துவமனைகள், அரசு மற்றும் தனியார் கட்டிடங்கள், திரையரங்குகள் மற்றும் உணவு விடுதிகள் ஆகிய இடங்களில் 1,965 மலேரியா தொழிலாளர்களை கொண்டு, 15 மண்டலங்களில் 609 தெருக்களில் 83,808 இடங்களில் டெங்கு கொசு ஒழிப்பு மற்றும் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டது. இவ்வாய்வின் போது, அப்பகுதிகளிலிருந்து தேங்காய் சிரட்டைகள், பாட்டில்கள், டயர்கள் போன்ற 7.6 மெட்ரிக் டன் அளவிலான தேவையற்ற பொருட்கள் சென்னை மாநகராட்சியால் அப்புறப்படுத்தப்பட்டு, அவ்விடங்களில் தூய்மைப் பணிகள் மேற்கொள்ளப்பட்டது.

சென்னை அடையாறு மண்டலத்திற்குட்பட்ட ஐ.ஐ.டி. வளாகத்தில்டெங்கு கொசு ஒழிப்பு மற்றும் நோய் தடுப்பு நடவடிக்கைகளை மண்டல கண்காணிப்பு அலுவலரும், தொழில் துறை துணைச் செயலருமான கே.பாலசுப்பிரமணியம் திடீர் ஆய்வு செய்தார்.

மேலும், பொதுமக்களிடம் தேவையின்றி தேங்கி நிற்கும் நீரில் டெங்கு கொசுவை உற்பத்தி செய்யும் புழுக்கள் உருவாக வாய்ப்புள்ளதால், அப்பொருட்களை அப்புறப்படுத்தி சுத்தமாக வைத்துக் கொள்ளவும், தண்ணீர் சேமித்து வைக்கும் குடங்கள், டிரம் மற்றும் பாத்திரங்கள், நீர்தொட்டிகளை மூடிவைக்கவும், மேல்நீர்தேக்கத் தொட்டிகளை அவ்வப்பொழுது குறிப்பிட்ட கால இடைவெளிகளில் பிளீச்சிங் பவுடர் கொண்டு சுத்தம் செய்திடவும் கட்டட உரிமையாளர்கள் மற்றும் குடியிருப்பு வாசிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

பொதுமக்கள் தாங்கள் வசிக்கும் பகுதியினை சுகாதாரக்கேடு இல்லாத பகுதியாக மாற்றிட சென்னை மாநகராட்சிக்கு தங்களது முழு ஒத்துழைப்பை நல்கிட வேண்டுமென கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

குடியுரிமை சட்டத்திருத்த மசோதாவை எதிர்த்து அசாமில் இன்று பந்த்: 46 அமைப்புகள் போராட்டம்

கவுகாத்தி, அக்.23–

தேசிய குடியுரிமை சட்டத்திருத்த மசோதாவுக்கு எதிர்ப்பு தெரிவித்து அசாமில் இன்று 46 அமைப்புகள் சார்பில் முழு அடைப்பு போராட்டம் நடைபெற்றது.

மத்திய பா.ஜ.க. அரசு கடந்த 2016ம் ஆண்டு குடியுரிமை சட்டம் 1955ல் திருத்தங்கள் செய்து மக்களவையில் தாக்கல் செய்தது. அந்த திருத்தத்தின்படி வங்கதேசம், பாகிஸ்தான் மற்றும் ஆப்கானிஸ்தானில் இருந்து 2014ம் ஆண்டு டிசம்பர் 31ம் தேதிக்கு முன்பு இந்தியாவுக்கு வந்து சட்டவிரோதமாக குடியேறியவர்களில் இந்துக்கள், சீக்கியர்கள், புத்த மதத்தினர், சமணர்கள், பார்சிகள் மற்றும் கிறிஸ்தவர்களுக்கு இந்திய குடியுரிமை வழங்கப்படும் என தெரிவிக்கப்பட்டது.

இந்த சட்டத்திருத்த மசோதாவிற்கு அசாம் மாநிலத்தில் கடும் எதிர்ப்பு கிளம்பியது. 46 அமைப்புகள் சார்பில் இன்று 12 மணி நேர முழு அடைப்பு போராட்டத்திற்கு அழைப்பு விடுத்துள்ளன. அதன்படி இன்று வேலைநிறுத்தப் போராட்டம் நடைபெற்று வருகிறது. ஒரு சில இடங்களில் கடைகள் முழுமையாக அடைக்கப்பட்டுள்ளன. காங்கிரஸ் உள்ளிட்ட சில கட்சிகள் போராட்டத்திற்கு ஆதரவு அளித்துள்ளன.

ஆனால், முழு அடைப்பு போராட்டத்திற்கு மாநில பா.ஜ.க. அரசு அனுமதி அளிக்கவில்லை. அரசு ஊழியர்கள் அனைவரும் தவறாமல் பணிக்கு செல்ல வேண்டும் என்றும், முழு அடைப்புக்கு ஆதரவு அளிக்கும் வர்த்தக நிறுவனங்களின் லைசென்சுகள் ரத்து செய்யப்படும் என்றும் அரசு எச்சரித்துள்ளது.

விபத்தில் காயமடைந்த முதியவரை மீட்டு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார் முதல்வர்

புதுக்கோட்டை, அக்.23

கார் மீது மோட்டார் சைக்கிள் மோதிய விபத்தில் காயமடைந்த முதியவரை முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி மீட்டு, திருச்சி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்.

புதுக்கோட்டை மாவட்டம், ஆவுடையார்கோவில் அருகே உள்ள வெளியாத்தூர் கிராமத்தை சேர்ந்தவர் மதி(வயது 35). வாடகை கார் டிரைவர். மதி தனது காரில் ஆவுடையார்கோவிலில் இருந்து திருச்சி பாரதிதாசன் பல் கலைக்கழகத்திற்கு 2 பேரை அழைத்து வந்தார். 2 பேரையும் அங்கு இறக்கி விட்டு, திருச்சி நோக்கி காரில் சென்று கொண்டிருந்தார்.

மாத்தூரில் தஞ்சாவூர் ரிங்ரோடு அருகே சென்று கொண்டிருந்தபோது, பின்னால் புதுக்கோட்டை விராச்சிலையில் திருமண நிகழ்ச்சியை முடித்துவிட்டு, திருச்சி விமான நிலையத்தை நோக்கி முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி கார் மற்றும் அவருடைய பாதுகாப்பு வாகனங்கள் வந்தன.

இதைப்பார்த்த மதி, தனது காரை சாலையின் இடதுபுறத்தில் ஓரமாக நிறுத்த முயன்றார். அப்போது மாத்தூர் அருகே உள்ள சின்னசூரியூரை சேர்ந்த முருகேசன்(38) ஓட்டி வந்த மோட்டார் சைக்கிள் மதி காரின் பின்புறத்தில் மோதி கீழே சாய்ந்தது.

இதில் மோட்டார் சைக்கிளில் பின்னால் அமர்ந்து வந்த முருகேசனின் தந்தை தங்கமணி(65) சாலையில் விழுந்து காயமடைந்தார்.

இதைபார்த்த முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி தனது காரை நிறுத்தும்படி டிரைவரிடம் கூறினார். பின்னர் காரில் இருந்து இறங்கி வந்து காயமடைந்த தங்கமணியை மீட்டு ஆறுதல் கூறினார். இதையடுத்து பாதுகாப்பு போலீசார் மற்றும் அதிகாரிகள் தங்களது வாகனங்களில் இருந்து இறங்கி வந்தனர்.

பின்னர் பாதுகாப்பு வாகனத்துடன் வந்த ஆம்புலன்சில் காயமடைந்த தங்கமணியை மீட்டு முதலமைச்சர் திருச்சி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அனுப்பி வைத்தார். பின்னர் முதல்அமைச்சரின் கார் அங்கிருந்து புறப்பட்டு சென்றது.

தாய், தந்தையை இழந்ததால் கல்லூரி படிப்பை நிறுத்தி கூலி வேலை

படிப்பை தொடர அக்கா, தம்பிக்கு அரசு நிதி உதவி: எடப்பாடி பழனிசாமி உத்தரவு

சென்னை, அக்.23–

தாய், தந்தையை இழந்ததால் கல்லூரி படிப்பை பாதியில் நிறுத்தி கூலி வேலைக்கு சென்ற பெண்ணை, தொடர்ந்து கல்லூரியில் படிக்கவும் அவரது தம்பியையும் படிக்க வைக்கவும் அதற்கான செலவை அரசே ஏற்கும் என்று முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி அறிவித்துள்ளார்.

இதற்கான உத்தரவையும் முதலமைச்சர் பிறப்பித்துள்ளார்.

முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி இன்று வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:–

ஈரோடு மாவட்டம், சத்தியமங்கலம் வட்டம், காளிதிம்பம் கிராமத்தைச் சேர்ந்த சாமிநாதன் என்பவரின் மகள் சிவரஞ்சனி என்பவர் தனது தாய் தந்தை மறைவுக்குப் பிறகு, தன்னுடைய சகோதரர் ஹரிபிரசாந்த்தை தொடர்ந்து படிக்க வைப்பதற்காக, கோவை அரசு கலைக்கல்லூரியில் தான் படித்து வந்த பி.ஏ படிப்பினை நிறுத்தி விட்டு, 100 நாள் வேலை திட்டத்திற்கு செல்வதாகவும், தனக்கு அரசு வேலையோ அல்லது தொடர்ந்து படிப்பதற்கு உதவியோ தமிழ்நாடு அரசு செய்ய வேண்டும் என்று ஊடகத்தின் மூலம் வேண்டுகோள் விடுத்திருந்தார்.

சிவரஞ்சனியின் பேட்டியை தொலைகாட்சியில் 21.10.2018 அன்று காலை நான் பார்த்தேன். ஏழை எளிய மக்களின் நலனில் எப்பொழுதும் அக்கறை கொண்டு அம்மாவின் வழியில் செயல்படும் அம்மாவின் அரசு, சிவரஞ்சனி தொடர்ந்து கோவை அரசு கலைக்கல்லூரியில் படிப்பதற்கும், அவருடைய சகோதரர் ஹரிபிரசாந்த் தாளவாடி உண்டு உறைவிடப்பள்ளியில் தொடர்ந்து படிப்பதற்கும் தகுந்த நடவடிக்கை எடுக்கும். அவர்கள் இருவரும் தொடர்ந்து படிப்பதற்கு ஆகும் செலவை அம்மாவின் அரசே ஏற்கும். இதற்கான உத்தரவை நான் பிறப்பித்துள்ளேன்.

இவ்வாறு எடப்பாடி பழனிசாமி கூறியுள்ளார்.

விழுப்புரம் வடக்கு மாவட்டம், வானூர் ஒன்றியம், கோட்டைகுப்பம் எம்.ஜி.ஆர். திடலில் வானூர் ஒன்றிய கழகத்தின் சார்பில் நடைபெற்ற அண்ணா தி.மு.க. 47வது ஆண்டு விழா பொதுக் கூட்டத்தில் அனைத்துலக எம்.ஜி.ஆர். மன்றச் செயலாளரும், கழக ஆட்சிமன்ற குழு உறுப்பினருமான தமிழ்மகன் உசேன் கலந்து கொண்டு 1000 ஏழை பெண்களுக்கு சேலைகள் வழங்கினார். நிகழ்ச்சியில், மாவட்ட துணைச் செயலாளர் சக்கரபாணி எம்.எல்.ஏ., ஒன்றிய கழகச் செயலாளர் சதீஷ்குமார், கோட்டகுப்பம் நகர கழகச் செயலாளர் கணேசன், தலைமை கழக பேச்சாளர் திருவண்ணாமலை கலீல் பாட்சா, முஸ்லீம் உரிமை பாதுகாப்பு கழக பொதுச் செயலாளர் இடிமுரசு இஸ்மாயில், சேலம் அப்துல் ரஷீது, நகர எம்.ஜி.ஆர். மன்ற செயலாளர் அப்துல் ரவூப், நகர பேரவை இணைச் செயலாளர் நாராயண கண்ணன், நிர்வாகி அம்மாபிரியன் முகம்மது சேட், எம்.ஜி.ஆர். இஸ்மாயில், அமீன் ரியாஸ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

கோவில் வளாகங்களை பசுமையாக்க வல்லுநர் பங்கேற்கும் கருத்தரங்கு

அமைச்சர் சேவூர் ராமச்சந்திரன் துவக்கி வைக்கிறார்

சென்னை, அக். 23–

கோவில் வளாகங்களை பசுமையாக்கிருக்கோவில் வளாகங்களை பசுமையாக்கிட சிறந்த சுற்றுசூழல் மேம்பாடு குறித்த வல்லுநர்கள் பங்கேற்கும் ஒரு நாள் கருத்தரங்கை எக்ஸ்னோரா தொண்டு நிறுவனம், இந்து சமய அறநிலையத்துறை இணைந்து ஏற்பாடு செய்துள்ளது.

தமிழ்நாட்டில் உள்ள திருக்கோயில் வளாகங்களை தூய்மையாக பராமரித்து பசுமையாக்கிட சிறந்த சுற்றுசூழல் வல்லுநர்களை அழைத்து ஒரு நாள் கருத்தரங்கம் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. சிறப்பு கருத்தரங்கினை இந்து சமய அறநிலையத்துறையுடன், எக்ஸ்னோரா தன்னார்வ தொண்டு நிறுவனம், ஐடிசி மிஷன் சுனேரா கல் நிறுவனம் ஆகியவை இணைந்து நடத்தவுள்ளது. இக்கருத்தரங்கினை 26ந்தேதி காலை 9 மணிக்கு சென்னை கோபாலபுரம், கத்தீட்ரல் சாலை ஐடிசி வெல்கம் ஹோட்டல் (சோழா ஷெரட்டன்) 2ம் தளத்தில் உள்ள மண்டபத்தில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் சேவூர் எஸ்.ராமச்சந்திரன் துவக்கி வைத்து பேசுகிறார்.

இக்கருத்தரங்கில் இந்து சமய அறநிலையத் துறை ஆணையர் தா.கி. ராமச்சந்திரன் தலைமை வகித்து பேசுகிறார்.

இக்கருத்தரங்கில் எக்ஸ்னோரா தன்னார்வ தொண்டு நிறுவனர் எம்.பி.நிர்மல் மற்றும் எக்ஸ்னோரா தலைவர் சுலோச்சனா ராமசேஷன், எக்ஸ்னோரா பசுமை இயக்க தூதுவர் அனுராதா ஸ்ரீராம் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர். சுற்றுசூழல் பாதுகாப்பு குறித்த தொழில்நுட்ப கருத்தரங்கில் டாக்டர்.எம்.பி.ராஜசேகரன், வாசுகி ஐயங்கார், சுபாஷினி, சாமுவேல் பால்ராஜ் ஆகியோர் உரையாற்றயுள்ளனர்.

இதனை தொடர்ந்து பிரசித்தி பெற்ற திருக்கோவில்களில் செயல்படுத்தப்பட்டு வரும் சுற்றுச்சூழல் மேம்பாட்டிற்கான திட்டங்கள் குறித்தும் கூடுதலாக பல கோவில்களில் சுற்றுசூழல் மேம்பாட்டு திட்டங்களை சிறப்பாக செயல்படுத்துவது குறித்தும் சுற்றுசூழல் பாதுகாப்பு வல்லுநர்களால் கலந்துரையாடல் நிகழ்ச்சி நடைபெற உள்ளது.

திருக்கோயில் வளாகங்களை பசுமையாக்கும் முன்னோடி திட்டமாக சுற்றுசூழல் வல்லுநர்களால் திருக்கோயில் நிர்வாகிகளுக்கு திருக்கோயில்களின் கலாச்சாரம், பாதுகாப்பு, பக்தர்களின் பங்களிப்பு, திடக் கழிவு மேலாண்மை, பூஜை பொருள் கழிவுகளில் இருந்து உரம் தயாரித்தல், சாண எரிவாயு உற்பத்தி மற்றும் சூரிய ஒளி பயன்பாடு குறித்து ஒரு நாள் கருத்தரங்கம் நடைபெறும். கருத்தரங்கில் இந்து சமய அறநிலையத்துறை அலுவலர்களும், பணியாளர்களும் கலந்துகொள்வார்கள்.

equitas

எக்விடாஸ் ஹோல்டிங்ஸ் லிமிடெட்
CIN: L65100TN2007PLC064069
பதிவு அலுவலகம்: 410A, 4வது மாடி,
ஸ்பென்ஸர் ப்ளாசா, ஃபேஸ் 2, எண். 769,
மவுண்ட் ரோடு, அண்ணாசாலை, சென்னை - 2.
தொ.பே: 044-42995000 | தொலைநகல்: 044-42995050
www.equitas.in | மின் அஞ்சல்: secretarial@equitas.in

செபி (பட்டியல் கட்டுப்பாடுகள் மற்றும் வெளியீடு தேவைகள்) விதிகள் 2015–ன், விதி 29 மற்றும் விதி 47ன் படி, செப்டம்பர் 30, 2018 அன்று முடிவடைந்த காலாண்டு மற்றும் அரையாண்டுக்கான தணிக்கை செய்யப்படாத நிதி நிலை முடிவுகள் மற்றும் இதர விஷயங்களைப் பரிசீலிக்க, நவம்பர் 2, 2018 வெள்ளிக்கிழமை அன்று நிறுவன இயக்குனர்களின் கூட்டம் நடைபெறும் என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

இந்த அறிவிப்பு நிறுவனத்தின் இணையதளம் www.equitas.in மற்றும் பங்குச் சந்தை இணையதளங்களில் www.bseindia.com மற்றும் www.nseindia.com உள்ளது.

எக்விடாஸ் ஹோல்டிங்ஸ் லிமிடெட்க்காக
இடம் : சென்னை (ஒப்பம்)
தேதி : அக்டோபர் 22, 2018 திருமதி ஜெயஸ்ரீ சு அய்யர், நிறுவன செயலர்

மகேந்திரா ஹாலிடேஸ் & ரிசார்ட்ஸ் இந்தியா லிமிடெட்
பதிவு அலுவலகம்: மகேந்திரா டவர்ஸ் 2வது தளம்,
17/18, பட்டுல்லாஸ் சாலை, சென்னை–600 002.
Tel: +91 44 3988 1000, Fax: +91 44 3027 7778
இணையதளம்: www.clubmahindra.com
மின்னஞ்சல்: investors@mahindraholidays.com
சிஐஎன்:L55101TN1996PLC036595
ClubMahindra

அறிவிப்பு

இதன் மூலம் அறிவிக்கப்படுவது யாதெனில் செக்யூரிட்டீஸ் அண்ட் எக்ஸ்சேஞ்ச் போர்டு ஆப் இந்தியா (பட்டியலிடும் கட்டுப்பாடுகள் மற்றும் வெளியீட்டுத் தேவைகள்) விதிகள் 2015ன், விதிமுறைகள் 29 மற்றும் விதி 47 ஆகியவற்றின்படி இதர அலுவல்களுக்கு இடையே, நிறுவனத்தின் சட்டப்பூர்வ தணிக்கையாளர்களின் [illegible] ஆய்விற்குட்பட்டு செப்டம்பர் 30, 2018 அன்று முடிவடைந்த காலாண்டு மற்றும் அரை ஆண்டுக்கான தணிக்கை செய்யப்படாத நிதிநிலை முடிவுகளை பரிசீலித்து ஒப்புதல் வழங்க நிறுவனத்தின் இயக்குனர்கள் குழுக் கூட்டம் திங்கட்கிழமை, அக்டோபர் 29, 2018 அன்று நடத்தப்பட உள்ளது.

இந்த அறிவிப்பு நிறுவனத்தின் பங்குகள் பட்டியலிடப்பட்டுள்ள பிஎஸ்இ லிமிடெட்டின் இணையதளம் (www.bseindia.com), நேஷனல் ஸ்டாக் எக்சேஞ் ஆப் இந்தியா லிமிடெட்டின் இணையதளம் (www.nseindia.com) மற்றும் நிறுவனத்தின் இணைய தளம் www.clubmahindra.com ஆகியவற்றிலும் பெறக்கூடும்.

மகேந்திரா ஹாலிடேஸ் & ரிசார்ட்ஸ் இந்தியா லிமிடெட்டுக்காக
ஒப்பம்/–
[illegible]
தலைமை நிதி அதிகாரி
இடம் : மும்பை
தேதி : அக்டோபர் 22, 2018

L&T Financial Services
Housing Finance

[illegible]
பதிவு அலுவலகம்: [illegible], பிளாட் எண். 177, [illegible]
[illegible] - 400 098
கிளை அலுவலகம்: சென்னை, மதுரை

உரிமைகோரும் அறிவிப்பு

2002 ஆம் ஆண்டின் நிதிச் சொத்துக்கள் பாதுகாப்பு மற்றும் மறுசீரமைப்பு, மற்றும் உத்தரவாத நலனை செயல்படுத்தும் சட்டத்தின் பிரிவு 13(2) இன் கீழ் இந்த அறிவிப்பு வெளியிடப்படுகிறது. [illegible]

[illegible]

கடன் கணக்கு எண்	கடனாளி(கள்) மற்றும் கடன் உடன்பெற்றவரின் பெயர்(கள்)	கடன் தொகை (₹)	உரிமை கோரும் அறிவிப்பு நாள்/ வாராக்கடன் நாள்/ நிலுவைத் தொகை		அடமான சொத்தின் விவரம் [illegible]
			வாராக்கடன் நாள்	மொத்த நிலுவைத்தொகை (₹)	
MDU-L16000127 and MDU-L16000130	1. [illegible] 2. [illegible]	ரூ. 1800000/- மற்றும் ரூ. 59955/-	NPA தேதி: 04/08/2018 டிமாண்ட் நோட்டீஸ் தேதி: 21-09-2018	ரூ. 1829939.87/- 04/09/2018 ஆம் தேதிப்படி	[illegible]
C-NH-13166873	1. [illegible] 2. [illegible]	ரூ. 2428632/-	NPA தேதி: 05/06/2018 டிமாண்ட் நோட்டீஸ் தேதி: 21-09-2018	ரூ. 477087.34/- 04/09/2018 ஆம் தேதிப்படி	[illegible]
C-NH.17000108 and C-NH.17000121	1. [illegible] 2. [illegible]	ரூ. 20600000/- மற்றும் ரூ. 259835/-	NPA தேதி: 04/08/2018 டிமாண்ட் நோட்டீஸ் தேதி: 21-09-2018	ரூ. 20908563.03/- 04/09/2018 ஆம் தேதிப்படி	[illegible]
C-NH.17000280 and C-NH.17000305	1. [illegible] 2. [illegible] 3. [illegible]	ரூ. 16700000/- மற்றும் ரூ. 4800000/-	NPA தேதி: 04/08/2018 டிமாண்ட் நோட்டீஸ் தேதி: 21-09-2018	ரூ. 21937681.13/- 04/09/2018 ஆம் தேதிப்படி	[illegible]
C-NH14558658	1. [illegible] 2. [illegible]	ரூ. 706779/-	NPA தேதி: 02/08/2018 டிமாண்ட் நோட்டீஸ் தேதி: 12-09-2018	ரூ. 1139588.58/- 04-09-2018 ஆம் தேதிப்படி	[illegible]

தேதி: 23.10.2018
இடம்: சென்னை, மதுரை
ஒப்பம்/-
அதிகாரம் பெற்ற அதிகாரி
[illegible]